# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
# அசல் வழக்கு எண். 250/2012

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | அருள்முருகன் | மதம் | .. | இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. | பச்சமுத்து | தொழில் | .. | விவசாயம் |
| வயது | .. | 30 | ஜாதி | .. | |
| கிராமம் | .. | சுண்டமேட்டுர் | நாள் | .. | 07.03.2020 |
| வட்டம் | .. | சங்ககிரி | | | |

வா.சா.1 – அருள்முருகன் - 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

தாவா சொத்து ஆரம்பத்தில் ஒரு பாலசுப்ரமணியம் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால், சரிதான். தாவா சொத்து புதூர் கிராமத்தில் உள்ளது என்றால், சரிதான். அதன் சர்வே எண். 252/4 ஏ என்றால், சரிதான். தாவா சொத்தின் விஸ்தீணரம் 39 சென்ட் என்றால், சரிதான். தாவா சொத்தை ஒரு மணிவாசகம் என்பவர் 05.06.2008 ஆம் தேதி கிரையம் வாங்கினார் என்று எனது வழக்குரையில் கூறியிருக்கிறேன் என்றால், சரிதான். மேலும் அந்த மணிவாசகத்திடம் இருந்து எனது தகப்பனார் பச்சமுத்து 23.06.2009 ஆம் தேதி கிரையம் வாங்கினார் என்றால், சரிதான். அந்த சொத்தை கடந்த 06.06.2011 ஆம் தேதி எனது பெயருக்கு எனது தகப்பனார் தான செட்டில்மென்ட் எழுதி வைத்தார் என்று நான் கூறியிருக்கிறேன் என்றால், சரிதான். இந்த வழக்கில் நான் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரிதான். 05.06.2008 ஆம் தேதி மணிவாசகம் என்பவர் கிரையப்பத்திரம் எழுதுவதற்கு முன்பாகவே இந்த 1 முதல் 3 பிரதிவாதிகளும், பாலசுப்ரமணியமும் கடந்த 11.03.2008 ஆம் தேதி தாவா சொத்தை பொறுத்து ஒரு கிரைய ஒப்பந்தப்பத்திரத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள் என்று சொன்னால், சரிதான், அவர் தீர்ப்பு கடனாளியாக இருந்தார். மேற்கண்ட மணிவாசகம் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார் என்றால், சரிதான். நானும், எனது தகப்பனாரும் அதேபோல் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறோம் என்று சொன்னால், எனது தகப்பனார் மட்டும்தான் செய்கிறார், நான் விவசாயம் செய்கிறேன். தாவா சொத்தின் சக்குபந்தி தெரியுமா என்றால், தெரியும், கிழக்கில் ரமேஸ் என்பவரின் வீடு, மேற்கில் சீரங்கன் என்று அழைப்பவரின் வீடு உள்ளது, வடக்கில் தார்ரோடு உள்ளது, தெற்கில் எனது அப்பா பச்சமுத்துவின் வீடு மற்றும் நிலம் உள்ளது.

வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம் / அருள்முருகன்

ஒப்பம் / திருமதி.மு.பாக்கியம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.